29th February 1964]

ஸ்தல பாசன மானியம்

*118 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்கள் பராமரிக்கும் சிறுபாசன ஏரிகளுக்கு ஆகும் செலவை எந்த விகிதத்தில் அரசாங்கம் கொடுக்கின்றது ?

(இ) இதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) 1960-ம் ஆண்டுடன் முடிவடைந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த ஏரிகளைப் பராமரிப்பதற்கான சராசரி ஆண்டுச் செலவின் அடிப்படையில், பாசன வசதி பெற்ற ஆயக்கட்டில் ஏக்கராவுக்கு 1 ரூ 50 நயா பைசாவிலிருந்து 2 ரூ. 50 ந.பை. வரை ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஸ்தல பாசன மானியம் அளிக்கப்படுகிறது.

(இ) ஆம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார் ஏற்கனவே இந்த மைனர் இர்ரிகேஷன் ஏரிகளெல்லாம் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்ற காரணத்தினால், திறம்பட நிர்வகிக்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் வசம் கொடுக்கப் பட்டது. ஆனால் ஏற்கனவே செலவழித்த பணம் போதவில்லை. ஆகவே அவற்றை நல்ல முறையிலே அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக அதிகப்படியாக மானியத்தை அரசாங்கம் ஒதுக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மானியத்தை உயர்த்துவது பற்றித்தான் பரிசீலனையில் இருக்கிறது என்று ஏற்கனவே பதிலில் சொன்னேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த ஏரிகள் பல ஆண்டுகளாக, ஏன் 50, 60 ஆண்டு காலமாகக் கைவைக்கப் படாமல் இருந்து வந்திருக்கின்றன. மராமத்துக்குக் கொடுக்கும் பணம் போதாது என்று ஆங்காங்கு இருக்கும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் தகவல் அனுப்பியிருக்கின்றன. ஆகவே அதற்கான தொகையை அதிகப்படுத்தி விரிவாகச் செய்ய அரசாங்கம் உத்தரவு அனுப்புவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏரிகள் என்றால் எல்லா ஏரிகளையும் அப்படி எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு சில ஏரிகளைப் பரிசீலிக்கலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, சிறிய நீர் பாசனத் திட்டத்திற்கு ஆரம்பத்தில் ஆகும் செலவு அதிகம் ஆகும். அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, ஆண்டுதோறும் செப்பனிடுவதற்கு விகிதாச்சாரப்படி அந்த முறையில் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்க அனுமதி கொடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரிச் செய்வதாக உத்தேசம் இல்லை.

[29th February 1964

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே. சிறிய நீர்ப் பாசன ஏரிகளுக்கு வரத்துக்கால் தூர் எடுப்பது குடி மராமத்து முறையில் வைத்திருக்கிறார்கள். அதனால் சரியாகத் தூர் எடுக்கப் படுவதில்லை. ஆகவே இதை பஞ்சாயத்து யூனியன்களின் முழுப் பொறுப்பில் செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அதுபற்றித் தகவல் இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of the fact that most of the tanks in the taken-over villages have been grossly neglected during the Zamindari period, these tanks require complete renovation and repairs, and the irrigation grant now given is inadequate, will the Government issue orders to renovate completely these tanks which are in a dilapidated condition and then give them to the Panchayat Unions for maintenance?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள டேங்குகள் சம்பந்தப்பட்ட மட்டில் செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது தனிப் பட்ட முறையில் டேங்குகள் பராமரிப்பு சம்பந்தப்பட்டது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்தச் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள், ஸ்பிரிங் சானல்கள், பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்படாத ஏரிகள் இனும் கிராமங்களில் இருக்கின்றன. அதனால் புதிதாக ஒரு திட்டத்தை வகுத்து ஒவ்வொரு ஏரிக்கும்—மெயின்டினன்ஸ் பின்னால்—மராமத்து செய்ய மொத்தமாகத் தொகையைக் கொடுத்து, குறித்த காலத்திற்குள், இரண்டு ஆண்டுகளுக்குள் மராமத்து செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி கிராண்டு போக ஸ்பெஷல் அல்லாட்டுமெண்டாக 1962-ல் பத்து லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்த வருஷம் கூட அதிக பட்சம் தொகை ஒதுக்க வேண்டுமென்று பிரதம எஞ்ஜினியர் கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது மானியத் தொகையை அதிகரிப் பது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். பரிசீலனை எப் பொழுது முடியும்? மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது மானியத் தொகை பெறுகிறோமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினேன். துரிதமான பரிசீலனையில் தான் இருக்கிறது.

திரு. ஏ. ஆறுமுகம் : பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகச் சிறிய பாசன ஏரிகள் பராமரிக்கப்படுவதிலே காலதாமதம் ஏற்படுவதால் பராமரிப்பு வேலைகள் செய்யப்படாமலே போய் விடுகின்றன. ஆகவே, ஃபுட் ப்ரொடக்ஷன் இலாகா அல்லது பொது மராமத்து இலாகா மூலமாக இந்த வேலைகளைச் செய்வ தற்குச் சர்க்கார் யோசிக்குமா?

29th February 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்து யூனியன்களுக்கு இம்மாதிரி பொறுப்புக்கள் எல்லாம் வழங்கப்படவேண்டும் என்பது விதி. அந்தப் பொறுப்புக்களை அவர்கள் திருப்திகரமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள்.

நீர்ப்பாசன வசதி

*119 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா கற்பகநாதர் குளம் கிராமத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை என்ன ?

(உ) திட்டம் பூர்த்தியாகவில்லை யென்றால் அதற்கான காரணமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) ரூ. 60,000.

(உ) இத் திட்டத்தில் மொத்தம் 8 துணை வேலைகள் உள்ளன வென்றும் இதில் 7 துணை வேலைகள் முழுமையாகப் பூர்த்தியடைந்து விட்டனவென்றும் தலைமைப் பொறியாளர் (பாசன) அறிவித்துள்ளார். தனி வடிகால் வாய்க்கால் ஒன்றை வெட்டுவதற்குச் சம்பந்தப்பட்ட மீதியுள்ள ஒரு துணை வேலையும் பொதுவாக பூர்த்தியடைந்துவிட்டது; இந்த வாய்க்காலின் சரிவுகளுக்குச் சிமிட்டி பூசுவது போன்ற நிறைவு வேலைகள் மட்டுமே இன்னும் பூர்த்தியாக வேண்டியிருக்கிறது. ஆனால், நில ஆர்ஜித வேலைகள் பூர்த்தியடையாததால், பட்டா நிலங்களுக்குச் செல்ல அனுமதி கிடைக்காததையொட்டி, பாசனத்திற்கான சில வேலைகள் இன்னும் பூர்த்தியடையவில்லை. பட்டா நிலங்களுக்குச் செல்லத் தேவையான அனுமதியை ரெவின்யூத் துறையிடம் பெற்று கூடிய விரைவில் வேலையை முடிக்கும்படி வெண்ணாறு டிவிஷன் நிர்வாகப் பொறியாளரை (பாசனத்) தலைமைப் பொறியாளர் கேட்டுள்ளார்.

(a) Yes.

(b) Rs. 60,000.

(c) The Chief Engineer (Irrigation) has stated that the scheme comprises 8 sub-works of which 7 sub-works have already been completed in all respects. The remaining sub-work of excavation of a separate drainage channel has also been generally completed except some finishing items like trimming slopes, etc., for the drainage where permission to enter into patta lands could not be obtained, pending finalisation of land acquisition proceedings. The Executive Engineer, Vennar Division, has been instructed by the Chief Engineer (Irrigation) to contact the Revenue Department for getting necessary permission to enter upon the land and to complete the work in all respects as early as possible.